DECEMBER 2022 **P/ID 35313/PTL1C**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. தொல்காப்பியம் - பெயர்க் காரணம் கூறுக.

2. நடுவண் ஐந்திணையுள் நடுவணது எது?

3. முல்லையின் முதற்பொருள் எவை?

4. கூதிர் காலம் எந்தத் தமிழ் மாதங்களில் நிகழும்?

5. வேட்டுவர் என்பது எத்திணைப் பெயர்?

6. பொருள்வயிற் பிரிதல் என்றால் என்ன?

7. கைக்கிளைக்குப் புறனான புறத்தினை எது?

8. புறத்திணையியல் - பெயர்ப் பொருத்தம் சுட்டுக.

9. வேந்துவிடு முனைஞர் என்போர் யார்?

10. காமக் கூட்டம் எனப்படுவது எது?

11. மறையோர் என்பார் யார்?

12. தலைவியைவிடத் தலைவன் மிக்கோனாக இருக்கலாமா?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. அகப்பாடலில் இடம்பெறும் கருப்பொருள் யாவை?

14. உடன்போக்கில் தோழி கூற்று நிகழும் இடங்கள் எவை?

15. ஐந்திணையில் கதைமாந்தரின் இயற்பெயர் சுட்டப்படாதது ஏன்?

16. 'பெருமையும் உரனும் ஆடூஉ மேன' - விளக்குக

17. 'பாங்காம் நிமித்தம் பன்னிரண்டு' என்னும் நூற்பா கூறுவது யாது?

18. வாயில்கள் குறித்துக் கற்பியல் கூறுவதை விவரிக்க.

19. பால்கெழு கிளவி பற்றிப் பொருளியல் கூறுவது என்ன?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. முதல், கரு, உரிப்பொருட்களை விளக்குக.

21. 'அகப் பாடல்கள் உளவியல் நுட்பம் உடையன' என்னும் கூற்றை ஆராய்க.

22. பாடாண்திணைப் பகுதிகள் சிற்றிலக்கியங்களாக வளர்ந்த பாங்கைப் பகர்க.

23. கற்பியலில் தலைவி பேசுமிடங்களை ஆய்க.

24. உள்ளுறை உவமம் குறித்து விளக்குக.

———————